செ.வெ.எண்: 62 நாள்: 22.11.2016

# புதுக்கோட்டை மாணவனின் ஊஞ்சலில் மின்சாரம் படைப்பு தேசிய அளவிலான அறிவியல் கண்காட்சிக்கு தேர்வு - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாநில அளவில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் வெற்றி பெற்ற மாணவனை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் 21.11.2016 அன்று நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்து கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், கம்மங்காடு மேலப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு பயிலும் மாணவன் பரமசிவம் என்பவரது மகன் ப.அழகுதாஸ், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் தொழில்நுட்பக்கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கண்காட்சியில் தனது படைப்பான "ஊஞ்சலில் மின்சாரம்" என்ற ஆய்வினை காட்சிக்கு வைத்து செயல்படுத்தி வெற்றி பெற்று நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆஷியாமரியம்,இ.ஆ.ப., அவர்களிடம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழை பெற்று சாதனை புரிந்ததை தொடர்ந்து இம்மாணவனை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்ட இம்மாணவர் டெல்லியில் வருகின்ற 09.12.2016 அன்று நடைபெறும் தேசிய அளவிலான அறிவியல் கண்காட்சியில் தன்னுடைய "ஊஞ்சலில் மின்சாரம்" படைப்பினை காட்சிக்கு வைக்க உள்ளார். எனவே தேசிய அளவிலான போட்டியில் இம்மாணவர் வெற்றி பெற்று நமது மாநிலத்திற்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இம்மாணவர் 2014, 2015 மற்றும் 2016ம் கல்வியாண்டுகளில் வினாடி-வினா போட்டிகளில் மாவட்ட அளவில் முதலிடமும், 2016ல் மாநில அளவில் முதலிடமும் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.சாந்தி, மாவட்ட கல்வி அலுவலர் திரு.தமிழ்ச்செல்வன், தலைமையாசிரியர் திருமதி.சீதாலெட்சுமி, ஆசிரியர் திரு.மகேஷ்வரன், மாணவனின் பெற்றோர் திரு.பரமசிவம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**